MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

Jurong Health

SingHealth

SINGHEALTH / PIL / T66R0

நோயாளி தகவல் கையேடு

# வைரஸ் நுண்கிருமி எதிர்ப்பிகள்
(ANTIVIRALS)

எசைக்குளோவிர் (Acyclovir)
வலாசிகுளோவிர் (Valaciclovir)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

எசைக்குளோவிர் மற்றும் வலாசிகுளோவிர் ஆகியவை வைரஸ் நுண்கிருமிகளை எதிர்க்கும் மருந்துகளாகும். ஹெர்பஸ் (herpes) வைரஸ் கிருமிகள் ஏற்படுத்தும் பிறப்பு உறுப்பில் அக்கி, புண்கள், அம்மை (shingles) மற்றும் சின்னம்மை (chicken pox) போன்ற தொற்றுநோய்களுக்குச் சிகிச்சை அளிக்க இவை பயன்படுத்தப்படுகின்றன. இவை ஹெர்பஸ் கிருமிகள் பெருகுவதையும் பரவுவதையும் மெதுவடையச் செய்து, உடல் தொற்றுநோய்களை எதிர்த்துப் போரிட உதவுகின்றன.

வலாசிகுளோவிர் தானாகச் செயல்பட முடியாத ஒரு மருந்தாகும் (prodrug). இது கல்லீரலால் செயல் திறமுடைய எசைக்குளோவிர் மருந்தாக மாற்றப்படும்.

எசைக்குளோவிர், வலாசிகுளோவிர் மருந்துகளை வேறு சில உடல்நலப் பிரச்சினைகளுக்கும் பயன்படுத்தலாம்.

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

எசைக்குளோவிர், வலாசிகுளோவிர் மருந்துகளை மருத்துவர் கூறுவது போலவே உட்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வேளை மருந்தையும் ஒரு முழு கிளாஸ் தண்ணீருடன் உட்கொள்ளுங்கள். இம்மருந்துகளை உணவுடனோ அல்லது வெறும் வயிற்றிலோ எடுக்கலாம். எனினும், இவற்றை உணவுடன் உட்கொள்ளும்போது வயிறு அவ்வளவாக பாதிப்படையாது.

போத்தலின் அடியில் கெட்டித் திரவமாகவும் மேலே நீராகவும் இருக்கும் இம்மருந்தை அளப்பதற்கு முன்பாக, போத்தலை நன்றாகக் குலுக்க வேண்டும். மருந்து சரியாக அளக்கப்படுவதை உறுதி செய்ய, வழக்கமான மேசைக் கரண்டி பயன்படுத்துவதற்குப் பதிலாக, சரியான அளவுடைய சிறப்புக் கரண்டி அல்லது சிறு குவளை பயன்படுத்துவது நல்லது.

## மருந்து போட்டுக் கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை நீங்கள் எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வருவது போன்ற கடுமையான பக்க-விளைவுகள் ஏற்பட்டால், எசைக்குளோவிர் அல்லது வலாசிகுளோவிர் சாப்பிடுவதை உடனே நிறுத்திவிட்டு, அவசரச் சிகிச்சை நாடுங்கள் அல்லது மருத்துவரை உடனே அழையுங்கள்:

- மூச்சு விடச் சிரமப்படுதல்
- தொண்டை அடைத்து கொள்ளுதல்
- உதடு, நாக்கு அல்லது முகம் வீங்குதல்
- தோல் தடிப்புகள்
- சிறுநீர் குறைவாகச் சுரத்தல் அல்லது அறவே நின்றுவிடுதல்
- வழக்கத்திற்கு மாறான இரத்தப்போக்கு அல்லது உடல்காயங்கள்

பின்வருவது போன்ற கடுமையில்லாத பக்க-விளைவுகள் பெரும்பாலும் ஏற்படலாம். என்றாலும், எசைக்குளோவிர் அல்லது வலாசிகுளோவிர் மருந்தைத் தொடர்ந்து எடுத்து வாருங்கள், மற்றும் பக்க-விளைவுகள் குறித்து மருத்துவரிடம் பேசுங்கள:

- குமட்டல்
- வாந்தி
- வயிற்றுப்போக்கு
- பசி குறைதல்
- வயிற்று வலி
- தலைவலி அல்லது தலைச்சுற்றல்
- மூட்டு வலி

மேலே குறிப்பிடப்படாத வேறு சில பக்க-விளைவுகளும் இருக்கலாம். வழக்கத்திற்கு மாறான, அல்லது அதிகத் தொல்லை தரும் பக்க-விளைவு இருந்தால், மருத்துவரிடம் பேசுங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

சிறுநீரக நோய் இருந்தால் அதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

எந்த மருந்துக்காவது ஒவ்வாமை இருந்தால் அதையும் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.